# மாற்றுப் பயிராக மக்காச்சோளம் !

## 10.01.2014



விற்பனைக்குக் கைகொடுக்கும் கால்நடைப் பல்கலைக் கழகம் ! இந்தியாவில் இறைச்சிக்கான தேவை பெருகிக்கொண்டே வருவதால், ஆடு, கோழி என கால்நடைப் பண்ணைகளும் பெருகிக் கொண்டே வருகின்றன. பெரும்பாலான பண்ணைகளில் கொட்டில் முறையில் கால்நடை வளர்ப்பு மேற்கொள்ளப்படுவதால், அடர் தீவனத்திற்கான தேவையும் பெருகிக்கொண்டே வருகிறது. மேய்ச்சல் நிலங்கள் குறைந்து கொண்டே வருவதும் அடர்தீவனத்திற்கான தேவைக்கு ஒரு காரணம். இத்தகையச் சூழலில், அடர் தீவனத்திற்கான மூலப்பொருட்கள் சாகுபடி மற்றும் விற்பனை ஆகியவை... நல்ல வருமானம் தரும் தொழில்களாக மாறியுள்ளன. குறிப்பாக, மக்காச்சோளத்திற்கு நல்ல விற்பனை வாய்ப்புள்ளது. இதைச் சரியாகப் புரிந்து கொண்ட பலரும் மக்காச்சோள சாகுபடிக்கு மாறி வருகின்றனர். பல மாவட்டங்களில் நெல்லுக்கு மாற்றுப்பயிராக மக்காச்சோளத்தை சாகுபடி செய்கிறார்கள். தற்போது, வேளாண் அறிவியல் மையங்களிலும் மக்காச்சோள சாகுபடி பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்கள். காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் மையம் மூலமாக, காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்திற்கு உட்பட்ட பட்டுமுடையார்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் மக்காச்சோள சாகுபடிக்கு மாறி, நல்ல வருமானம் ஈட்டி வருகிறார்கள். சென்னை – பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் சவீதா மருத்துவக் கல்லூரியைத் தாண்டியதும் வலது புறம் திரும்பினால்... 23 கிலோ மீட்டர் தொவைில் இருக்கிறது, பேரம்பாக்கம். அங்கிருந்து அரக்கோணம் செல்லும் சாலையில் 5 கிலோ மீட்டர் தூரம் பயணித்தால், பட்டுமுடையார்குப்பம். இந்த கிராமத்தில், நெல், காய்கறிகள், மலர்கள் என விவசாயம் செழிப்பாக நடக்கிறது. இந்த கிராமத்தைச் சேர்ந்த மனோகரன் என்பவரைச் சந்தித்தோம். இரண்டு வருடத்திற்கு முன் காட்டுப்பாக்கம் கே.வி.கே (வேளாண் அறிவியல் மையம்) நடத்திய மக்காச்சோளத்துக்கு சாகுபடி பயிற்சியில் கலந்துகொண்டேன். குறைந்த தண்ணீர், அளவான வேலையாள் இருந்தாலே மக்காச்சோளத்திற்கு போதுமானது என்று தெரிந்துகொண்டேன். நெல் சாகுபடி அளவுக்கு வருமானம் கிடைக்கும் என்று தெரிந்ததும் மக்காச்சோள சாகுபடி செய்யும் ஆசை வந்தது. கே.வி.கே. விஞ்ஞானிகள், எங்க கிராமத்திற்கு மக்காச்சோளத்திற்காக முகாம் நடத்தினார்கள். 50 பேர் கலந்து கொண்டோம். ஆனாலும் 4 பேர்தான் பயிர் செய்வதற்கு ஒப்புக்கொண்டார்கள். அதில் ஒருவனாக மூன்று ஏக்கரில் மக்காச்சோளம் போட்டேன். 100 நாளில், 5 டன் மகசூல் எடுத்தேன். கிலோ 11 ரூபாய் என்று கே.வி.கே. மூலமாகவே எடுத்துக் கொண்டார்கள். எல்லா செலவும் போக, 30 ஆயிரம் ரூபாய் லாபமாக நின்றது. அதன்பிறகு கே.வி.கே.மூலமாக மக்காச்சோளம் உற்பத்தியாளர் சங்கம்' ஆரம்பிச்சாங்க. அதற்கு நான்தான்

தலைவர். சங்கம் மூலமாக, காஞ்சிபுரம் மாவட்டம் முழுக்க இருக்கும் மக்காச்சோள விவசாயிகளுக்கு தொழில்நுட்பம், சந்தைபடுத்துவது பற்றி ஆலோசனைகளைக் கொடுத்துட்டு இருக்கிறேன். இதுவரைக்கும் மூன்று முறை மக்காச்சோளம் சாகுபடி செய்திருக்கிறேன். நெல்லைவிட, இதில் நல்ல லாபம் கிடைக்கிறது. காட்டுப்பாக்கம், வேளாண் அறிவியல் நிலையத்தின் தலைவர் மற்றும் பேராசிரியர் குமரவேலுவிடம் பேசியபோது, “மக்காச்சோளம், நடவு துவரை, வணிக ரீதியான மலர்கள், காளான், தேனீ வளர்ப்பு, ஒருங்கிணைந்தப் பண்ணையம்.. என மாற்றுப் பயிர்கள், லாபம் ஈட்டக்கூடிய தொழில் வாய்ப்புகள் தரும் பயிற்சிகளை எங்கள் மையத்தில் நடத்தி வருகிறோம். மக்காச்சோளத்திற்கு அதிக தேவையும், விற்பனை வாய்ப்பும் இருப்பதால்... மாற்றுப் பயிர்கள் வரிசையில் இதை முன்னிலைப்படுத்தி வருகிறோம். தவிர, குறைந்த தண்ணீரில், குறைந்த வேலையாட்களைக் கொண்டே சாகுபடி செய்ய முடியும். தமிழ்நாடு, கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் மத்திய தீவனத் தொழில்நுட்ப மையத்தின் தீவன அரவை ஆலை, காட்டுப்பாக்கம் வேளாண் நிலையத்தில் அமைந்துள்ளது. இதற்கே, ஒரு நாளைக்கு 4 டன் மக்காச்சோளம் தேவை. பெரும்பாலும், கர்நாடகா, மகாராஷ்டிரா மாநிலங்களிலிருந்துதான் கொள்முதல் செய்வோம். எங்கள் பகுதி விவசாயிகளுக்கு வாய்ப்பு அளிக்கும் நோக்கில்தான், ஒப்பந்த முறையில் சாகுபடி செய்யச் சொல்லி வருகிறோம். புதிதாக பயிர் செய்பவர்களுக்கு பயிற்சியும், தொழில்நுட்ப ஆலோசனையும் வழங்குகிறோம் என்றார் குமரவேலு. எங்களிடம் சேமிப்புக் கிடங்கு இருப்பதால், விவசாயிகள் கொடுக்கும் மக்காச்சோளத்தை உடனடியாகப் பெற்றுக் கொள்வோம். மற்ற மாவட்ட விவசாயிகளும் விற்பனைக்கு எங்களை தொடர்பு கொள்ளலாம். சந்தை விலையை விட 1 ரூபாய், 2 ரூபாய் கூடுதலாகவே கொடுத்து எடுத்துக் கொள்வோம். மாதத்திற்கு ஒரு முறை விலை நிர்ணம் செய்யப்படும். தற்போதைக்கு 1 கிலோ மக்காச்சோளம், 15.50 காசு விலையில் வாங்குகிறோம். மணிகளில் 10 சதவிகிதம் ஈரம் இருக்குமாறும், பூஞ்சாணத் தாக்குதல் இல்லாமலும், காய வைத்து கொடுக்க வேண்டும் என்பதை விவசாயிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்” என்று சந்தைத் தகவல்களையும் தந்தார்.

**தொடர்புக்கு,**

வேளாண் அறிவியல் நிலையம், காட்டுபாக்கம்,
தொலைபேசி: 044 -27452371
செல்போன் :98844 02613
மனோகரன்
செல்போன் :94446 60398
கோதண்டராமன்
செல்போன் :98405 40260

***ஆதாரம் : பசுமை விகடன் வெளியீடு www.vikatan.com***